


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 338

வெள்ளிக்கிழமை
31 ஒக்ரோபர் 2025

ஐப்பசி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50


# நாணய நிதியத்தின் தேவைக்கே பாடசாலை நேரம் மாற்றியமைப்பு

## ஆசிரியர்கள் சங்கம் குற்றச்சாட்டு போராட்டம் நடத்துவதற்கும் முடிவு

**கொழும்பு, ஒக்ரோபர் 31**

**உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் தேவைக்கு அமையவே அரசாங்கம் பாடசாலைகளின் நேரத்தை நீடிப்பதற்குத் தீர்மானித்துள்ளது. இந்தத் திட்டம் கைவிடப்பட வேண்டும். இல்லையேல் நாடளாவிய ரீதியில் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

11

## போதை மாபியாக்கள் எவரும் தப்பமுடியாது

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 31
நாட்டில் பெரும் பேரழிவை ஏற்படுத்தும் போதைப்பொருள் மாபியா முற்றுமுழுதாக வேட்டையாடப்படும். அவர்கள் ஓடுகின்ற இடமும் தெரியும், பதுங்குகின்ற இடமும் தெரியும். ஆதலால், சரணடைவது

11

## பட்டா வாகனத்துடன் விபத்து இளைஞர் ஒருவர் படுகாயம்!

### மட்டுவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 31
மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்கு அருகில் பட்டாரக வாகனமும், மோட்டார் சைக்கிளும் விபத்துக்கு உள்ளாகியதில், மோட்டார்சைக்கிளில் பயணித்த இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.
மோட்டார்சைக்கிளில் பயணித்த இளைஞர், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன்

11

## செம்மணிப் புதைகுழியின் உண்மையை வெளிப்படுத்துக

### யாழ்ப்பாணத்தில் நாளை ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 31
செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதிகோரி போராட்டமும், கருத்தரங்கும் யாழ்ப்பாணத்தில் நாளை முன்னெடுக்கப்படவுள்ளது.
சம உரிமை இயக்கத்தின்

11

வல்வெட்டித்துறை வெடிகுண்டு விவகாரம்

## சந்தேகநபர்கள் மூவரும் கட்டுநாயக்கவில் கைது

கொழும்பு, ஒக். 31
யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறைப் பகுதியில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் மீட்கப்பட்ட வெடிகுண்டுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
விடுதலைப் புலிகளுடையதாக இருக்கலாம் என்று கருதப்படும் அந்த வெடி

11

## யாழ். மாநகரசபையின் ஆதனம் மோசடியான முறையில் மாற்றம்

### சி.வீ.கே.சிவஞானம் குற்றஞ்சாட்டு



யாழ்ப்பாணம், ஒக். 31
யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆதனமொன்றுக்கு மோசடியான முறையில் உறுதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று யாழ்.மாநகரசபையின் முன்னாள் ஆணையாளரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான

11





## செம்மணிப் புதைகுழிக்கு நீதிகேட்டு கிறிஸ்தவ ஒன்றியத்தினர் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 31
செம்மணிப் மனிதப் புதைகுழிக்கு நீதிகோரி, யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று வியாழக்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
செம்மணி மனிதப் புதைகுழி அமைந்துள்ள சித்துப்பாத்தி இந்துமயானத்தின் முன்பாக அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து

11

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு விளம்பரங்களால் ஏமாறாதீர்கள்!**

விரிவு
பக்கம்:- 03

## பட்ஜெட்டை ஆதரிப்பதா?

### ஆராய்கின்றது தமிழரசு!

கொழும்பு, ஒக். 31
ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தின் பட்ஜெட்டை ஆதரிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் நவம்பர் மாதம் 5ஆம் தமிழரசுக் கட்சி

11

**முச்சந்தி முரளி**

'எப்பவுமே பிறத்தியாரின்ர தாளத்துக்கு ஆடுறதுதான் ஆட்சியாளரின்ர குணமாப் போட்டுது கண்டியளோ'

பப்ஜி மீதான மோகம்

## வீட்டார் பணம் வழங்காததால் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 31
பப்ஜி விளையாட்டில் ஈடுபடுவதற்கு வீட்டார் பணம் வழங்காததால், இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.
உரும்பிராயைச் சேர்ந்த 31 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:
பெருமளவு பணம் செலுத்தி விளையாடும் பப்ஜி விளையாட்டுக்கு அந்த இளைஞர் அடிமையாக

11

## தென்மறவர்களின் பெரும்போர் டிறிபேக் கல்லூரியில் இன்று!



யாழ்ப்பாணம், ஒக். 31
தென்மறவர்களின் பெரும்போர் என்று வர்ணிக்கப்படும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கும், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் ஆட்

11

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 30.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4240 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 29 70 73 80 |
| விரோ எழுத்து | J |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 30.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1307 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 26 38 47 61 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 30.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0266 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 5 5 6 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 30.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2346 |
| ஆங்கில எழுத்து | U |
| சுப்பர் இலக்கம் | 16 |
| வெற்றி இலக்கங்கள் | 01 02 19 58 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 30.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5998 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 1 1 6 8 2 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 30.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2028 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 03 34 38 57 |
| விசேட எழுத்து | S |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 30.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0114 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 19 24 40 |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 30.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0573 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 6 8 2 5 |

# சிறந்த தலைமைத்துவத்தை சந்ததியினருக்கு விதையுங்கள்

## வடக்கு ஆளுநர் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், ஒக்.31**

**ஒரு வேலையை எவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சிந்திப்பதைவிட அதைச் செய்யாமல் விடுவதற்கான காரணங்களைத் தேடுபவர்களாகவே சில திணைக் களங்களின் தலைவர்கள் உள்ளனர். இவற்றை மாற்றியமைக்க அடுத்த தலை முறையாவது மிகச்சிறந்த தலைமைத்துவப்பண்புடன் கட்டியெழுப்பப்படவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.**

தூய்மை இலங்கை செயற்றிட்டத்தின்கீழ் 'நாளைய தலைவர்களை உருவாக்குதல்' தேசிய வேலைத்திட்டத்தின் வடக்கு மாகாணத்துக்குரிய ஆரம்ப நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது.

அதில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு நிறுவனத்தின் வெற்றியும் தோல்வியும் அந்த நிறுவனத்தின் தலைவரின் தலைமைத்துவப் பண்பில்தான் தங்கியிருக்கின்றது. இன்று பல திணைக்களங்களின் தலைவர்களிடத்தில் சிறந்த தலைமைத்துவத்தைக் காணமுடியவில்லை. இவற்றையெல்லாம் மாற்றியமைக்க வேண்டுமாக இருந்தால், அடுத்த தலைமுறையாவது மிகச்சிறந்த தலைமைத்துவப் பண்புடன் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

புத்தாக்கச் சிந்தனையையும் தலைமைத்துவப் பண்பின் ஊடாக நீங்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும். எதிர்காலத்தில் எங்கள் மக்களுக்காக எவ்வாறான விடயங்களைப் புதிதாகச் செய்யலாம், அதன் ஊடாக அவர்களை எவ்வாறு மேம்படுத்தலாம் என்று சிந்திக்கின்ற தலைவர்களாக நீங்கள் உருவாக வேண்டும் - என்றார். (ச-213,113)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 30.10.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0706 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கம் | 0 3 4 5 0 9 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 30.10.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2972 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கம் | 05 11 34 58 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 30.10.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கம் | 18 48 56 57 |
| வெற்றி வாரம் | 5133 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 30.10.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0802 |
| வெற்றி இலக்கம் | 14 30 31 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 30.10.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| மீனம் | |
| வெற்றி இலக்கம் | 08 18 31 36 |
| சீட்டிழுப்பு வாரம் | 4684 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 30.10.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | E |
| சுப்பர் இலக்கம் | 12 |
| வெற்றி இலக்கம் | 01 35 36 74 |
| வெற்றி வாரம் | 2148 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 30.10.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கம் | 18 51 57 75 |
| வெற்றி வாரம் | 2798 |

# வர்த்தகப் பயிர்ச்செய்கையை மேம்படுத்தத் தொழில்நுட்பம்!

## *சீனாவுடன் கலந்தாய்வு*

கொழும்பு,ஒக்.31

தேயிலை, கோப்பி மற்றும் புகையிலைத் தொழில்களின் அபிவிருத்திகளுக்கு நவீன தொழில்நுட்பப் பயன்பாடுகள் குறித்து சீனா-இலங்கைக்குழுக்கள் ஆராய்ந்துள்ளன.

சீனாவின் யுனான் பிராந்தியத்தின் மக்கள் காங்கிரஸ் நிலைக்குழுவின் உபதலைவரான யான் யாலின் தலைமையிலான சீனப் பிரதிநிதிகள் குழுவுக்கும் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக்குழுவுக்கும் இடையில் நாடாளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் குறித்து கவனஞ்செலுத்தப்பட்டது.

குறைந்துவரும் தொழிற்படை காரணமாக எழும் சவால்களை வெற்றிகொள்வதற்கும், தேயிலைப் பயிர்ச்செய்கையின் உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் அவசியம் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், மண்ணின் வளத்தை மேம்படுத்தவும், பயிர் விளைச்சலை அதிகரிக்கவும் நான்காம் தலைமுறை உரங்களைப் பயன்படுத்துவது பொருத்தமானது என்று சீனத் தூதுக்குழுவினர் பரிந்துரைத்தனர்.

தற்போது 5,000 ஹெக்ரேயருக்கும் அதிகமான பரப்பளவில் கோப்பி பயிரிடப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் அதனை 10,000 ஹெக்ரேயராக விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இலங்கையின் புகையிலைத் தொழில் இன்னும் சிறிய அளவிலான தொழிலாகவே காணப்படுவதாகவும், தொழிற்சாலைகளை மையமாகக் கொண்ட மிகப்பெரிய அளவிலான தொழிற்றுறையாக அதனை அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவத்தை சீனப் பிரதிநிதிகள் குழுவினர் சுட்டிக்காட்டினர். (ச-இ)

### அத்துமீறிய மீன்பிடி

# இந்திய மீனவர்கள் 29 பேருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஒக்.31

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் யாழ்.நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட 29 தமிழக மீனவர்கள் எதிர்வரும் 7 ஆம் திகதிவரை வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதி 12 தமிழக மீனவர்களும், இம் மாதம் 9ஆம் திகதி 17 தமிழக மீனவர்களும் கைது செய்யப்பட்டனர்.

குறித்த மீனவர்கள் தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ச-66)

# தமிழ் மக்கள் கூட்டணியின் தலைமைச்செயலகம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.31

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைமைச் செயலகம் யாழ்ப்பாண மாவட்டத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இல: 58, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள குறித்த அலுவலகத்தை அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் திறந்துவைக்கவுள்ளார். நிகழ்வில் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கட்சியின் உப செயலாளரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் அழைப்பு விடுத்துள்ளார். (ச-20)

# எதிரணியின் பேரணிக்கு முன் சிறையில் அடைக்க முயற்சி!

## கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.31

எதிர்வரும் நவம்பர் 21ஆம் திகதி கூட்டு எதிரணியின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள 'நுகேகொட பேரணிக்கு' முன்னதாக எம்மைச் சிறையில் அடைக்க அரசாங்கம் சதிசெய்கின்றது என்று முன்னாள் அமைச்சரும், பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நபர் ஒருவரால், கையூட்டல் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவில் எனக்கு எதிராக ஒரு முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு அரசியல் உள்நோக்கம் கொண்டது. முறைப்பாடு செய்ததாகக் கூறப்படும் அரச சார்பற்ற நிறுவனத்தின் செல்லுபடியான பதிவு இலக்கம்கூட அதில் இல்லை. ஊழல் நிறைந்த ஒரு செயல்முறையின் விளைவாகவே கையூட்டல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட்டுள்ளார். நாம் அதை அம்பலப்படுத்தும் போது, தவறைத் திருத்துவதற்குப் பதிலாக, உண்மையைத் தெரியப்படுத்துபவர்களைச் சிறையில் அடைக்க அரசாங்கம் முயற்சிக்கிறது - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முதியோர்களின் எண்ணிக்கை நாட்டில் 18 வீதமாக அதிகரிப்பு

கொழும்பு,ஒக்.31

**ஆசிய பிராந்தியத்தில் வேகமாக வளர்ந்துவரும் முதியோர் மக்கள் தொகையைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

2012 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இலங்கையின் மக்கள் தொகையில் 12 வீதம் பேர் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள். 2024 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில், இது 18 வீதமாக உயர்ந்துள்ளது.

2040 ஆம் ஆண்டுக்குள், மக்கள் தொகையில் 25 வீதம் அதாவது, ஒவ்வொரு நான்கு பேரில் ஒருவர் முதியவர்களாக இருப்பார்கள்.

ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது முதியோர் தொகையில் அதிக வளர்ச்சி விகிதங்களைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையின் சனத்தொகையானது ஆண்டுதோறும் 0.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகத் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## ஒழுங்குபடுத்தப்படும் வாடகை வாகனங்கள்

கொழும்பு,ஒக்.31

முச்சக்கரவண்டிகள், பாடசாலைப் போக்குவரத்துச் சேவைகள் உட்பட ஏனைய வாடகை வாகனப் பயணச் சேவைகளை ஒழுங்குமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர், பொறியியலாளர் பீ. ஏ. சந்திரபால தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரிவில் ஈடுபட்டுள்ளவர்களின் பாதுகாப்புக்காக அரச சார்பற்ற போக்குவரத்துத் தொழிலாளர் சபையை ஒரு நிறுவனமாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## 150 மில்லியன் ரூபா மோசடி பெண்ணுக்கு சி.ஐ.டி. வலை

கொழும்பு,ஒக்.31

150 மில்லியன் ரூபா நிதிமோசடி செய்த குற்றச்சாட்டில் பெண்ணொருவரை குற்றப் புலனாய்வுத் துறை தேடிவருகிறது.

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி ரூ.150 மில்லியன் மதிப்புள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டதாக வந்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸாரால் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பெண் வேறொரு நபரைப்போல ஆள்மாறாட்டம் செய்து போலிப்பத்திரத்தில் கையெழுத்திட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## பெண்களுக்காக ஆணைக்குழு



கொழும்பு,ஒக்.31

பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க மகளிர் ஆணைக்குழுவொன்றை அமைப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஆணைக்குழுவுக்கு ஏற்கனவே ஏழு உறுப்பினர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த மகளிர் ஆணைக்குழுவின்மூலம், அரசு மற்றும் தனியார் திணைக்களப் பணியிடங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், துன்புறுத்தல்கள் மற்றும் அநீதிகள் குறித்து முறைப்பாடு அளிக்கமுடியும். (ச-இ)

## கஞ்சாச்செய்கை மூவர் சிக்கினர்!

கொழும்பு,ஒக்.31

தனமல்வில நிகவெவப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புச் சோதனையில் கஞ்சாச் செய்கையில் ஈடுபட்ட மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, சுமார் 4 இலட்சம் ரூபா பெறுமதியான கஞ்சாச் செடிகள் மற்றும் 128 கிலோகிராம் உலர்ந்த கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

தனமல்வில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு விளம்பரங்களால் ஏமாறாதீர்

### வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் எச்சரிக்கை

கொழும்பு,ஒக்.31

வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தொடர்பில், சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் போலியான விளம்பரங்களை நம்பி ஏமாற வேண்டாம் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் எச்சரித்துள்ளது.

விளம்பரங்களை நம்பி பணம் அல்லது கடவுச்சீட்டைக் கையளிப்பதற்கு முன்னர், குறித்த நிறுவனம் பணியகத்தில் பதிவுசெய்யப்பட்ட, செல்லுபடியான அனுமதிப்பத்திரம் கொண்ட நிறுவனமா?, சட்டபூர்வமான நிறுவனமாக இருந்தால், குறித்த வேலைவாய்ப்புக்காக பணியகத்தின் அனுமதிபெறப்பட்டுள்ளதா? என்பது குறித்து ஆராயவேண்டும்.

அத்துடன், மோசடி நிறுவனங்கள் அல்லது மோசடி நபர்கள் குறித்துத் தகவல் தெரிந்தால், பணியகத்தின் விசேட விசாரணைப் பொலிஸ் பிரிவின், 0112882228 என்ற இலக்கத்துக்கோ அல்லது 1989 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கோ தகவல் வழங்கமுடியும் என்றும் பணியகம் அறிவித்துள்ளது. (ச-இ)

## நீங்கள் மட்டுமேன் இப்பிடி?

ஏணி மாதிரி மற்றவையை உயர்த்திறதுக்கு இஞ்ச ஆக்கள் குறைவு. ஆனால் மேல ஏறிப்போறவையை இழுத்து விழுத்திறதுக்குமட்டும் "நான் முந்தி, நீ முந்தி" எண்டு எல்லாரும் படையா வெளிக்கிட்டு வந்திடுவினம். நேற்றுத்தான் பாத்திமா ஷபியா யாமிக் இலங்கைக்குத் தங்கம் எடுத்துக்குடுத்த விசயத்தை பட்சி சொன்னது. கொலைகாரச் செவ்வந்திக்குக் குடுத்த முக்கியத்துவத்தின்ர ஒரு வீதத்தைக் கூட நாங்களும், எங்கட நாட்டு மீடியாக்களும் அந்தத் தங்கமங்கைக்குக் குடுக்கேலை . ஆனால் அப்பிடி மதிக் காட்டியும் கூட மிதிக்காமல் இருந்தாலே புண்ணியம் எண்ட நிலையில அந்தப் பிள்ளை இருக்குதாம்.

பாத்திமா ஷபியா யாமிக் எண்ட பேரைப் பாத்தவுடனேயே உங்களுக்கு அவா ஒரு முஸ்லிம் பிள்ளை எண்டு தெரிஞ்சிருக்கும். இப்ப முஸ்லிம் பிள்ளையள் எல்லாரும் தலையில இருந்து பாதம் மட்டும் மறைக்கிற மாதிரி உடுப்புப் போடோணும் எண்டு வலிஞ்சு திணிக்கினம். அப்பிடி இருந்தால் தான் இஸ்லாம் மார்க்கம் சொன்னமாதிரி நல்லபிள்ளையாம். இல்லாட்டிக் கெட்ட பிள்ளையள் எண்டு முத்திரை குத்துகினம். அப்பிடிப்பட்ட வன்மவாதியள் இருக்கிற அந்த மதக்காரர், தங்கட இனத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளை முழு இலங்கைக்கும் பெருமை சேர்த்துத் தங்கம் வெண்டு வந்ததைப் பாராட்டாமல், "என்னெண்டு ரீசேர்ட்டோடையும், ரன்னிங் ஷோர்ட்ஸோடையும் கிரவுண்டுக்குள்ள, இவ்வளவு சனத்துக்கு முன்னால ஓடினவா? இப்பிடி எங்கட மதத்தை எல்லாருக்கும் முன்னால இழிவுபடுத்திப் போட்டா" எண்டு வாயிலையும், வயித்திலையும் அடிச்சு ஒப்பாரி வைக்கினம். அதோட "சாதிக்கிறதுக்கு உடை ஒரு தடையில்லை, முழு உடம்பையும் மறைக்கிறமாதிரி உடுப்புப்போட்டு சில முஸ்லிம் பொம்பிளையள் ஒலிம்பிக்கிலகூட ஓடியிருக்கினம். அவையை மாதிரி பாத்திமா ஷபியா யாமிக் ஓடியிருக்கலாமே?" எண்டும் புலம்புகினமாம்.

ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு உடுப்பு வசதியா இருக்கும். அந்தப் பிள்ளை இவ்வளவு கஷ்டப்பட்டு வெண்டதைக் கொண்டாடாமல் இப்பிடி பர்தா போடேலை, பாவாடை கட்டேலை எண்டு பாடையில போற கதையளைச் சொல்லிக்கொண்டிருந்தால் எப்பிடி அவை முன்னேறுவினம்? அதோட இப்பிடி முழு உடம்பையும் பொம்பிளையள் மறைக்கவேணும் எண்டு எழுதப்படாத சட்டம் இஞ்சையுள்ள முஸ்லிம்களிட்ட கிட்டடியிலதான் வந்தது. அதுக்கு முதல் சின்னப்பிள்ளையள் பஞ்சாபி மாதிரி உடுப்பும், பெரியவை சீலைத்தலைப்பால தலையை மூடறதும் தான் அவையின்ர கலாசாரம். கிட்டடியிலதான் அரபுக்காரர் , ஆப்கானிஸ்தான்காரர் மாதிரி தீவிரமதவாதம் இஞ்ச புகுந்து "உடம்பு முழுக்க மறைக்கிற மாதிரி உடுப்புப் போட்டால் தான் உண்மையான முஸ்லிம் பொம்பிளை" எண்டு சொல்லுற அளவுக்கு நிலைமை மோசமாப் போட்டுது. பகிடி என்னெண்டால் இஸ்லாமிய மதவாதம் கூடின நாடு எண்டு சொல்லுற ஆப்கானிஸ்தானிலகூட, விளையாட்டுப் போட்டியளுக்குப் பொம்பிளையள் ரன்னிங் ஷோர்ட்ஸும், ரீஷேர்ட்டும் போட்டுத்தான் போகினம். இஞ்சையுள்ளவை தான் மதத்தில பற்று எண்டு காட்ட இப்பிடிப் பொம்பிளையள் விளையாட்டுப் போட்டியில ஓடேக்ககூட போர்த்திக்கொண்டு, ஓடோணும் எண்டு அட்வைஸ் தவளையள் மாதிரிக் கத்துகினம் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

## சிறகடிக்கும் சிட்டுக்கள் - 2025

## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2025


# மாணவர்கள் கௌரவிப்பு விழா - 01.11.2025

Congratulations





N. LOJINAN Marks -178
T.KAJISHNAN Marks -176
J. PAVISANA Marks -173
J.DILOJAN Marks -171
L.APARNA Marks -167
R.THARUNIKAA Marks -166
V.ABISAN Marks -162
T.ABHIJITH Marks -162
K.RIDIHESH Marks -162
A.DIVYAN Marks -161
S.MATHUSHIKA Marks -160



W.AATHANA Marks -160
N.KANISHAN Marks -160
U.SAANVI Marks -159
J.AKSHAYA Marks -158
D.LATHUKESHAN Marks -158
T.THARSHANA Marks -157
A.AZMITHA Marks -157
A.RHADHUME Marks -157
K.ARATHANAA Marks -156
M.SAKEESHAN Marks -154
JE.SHARAN Marks -153




T.AKSHATHAN Marks -153
J.KARNIKA Marks -153
J.PRITHVIKAN Marks -152
T. JAVISHANA Marks -151
L.DILAKSHIKA Marks -151
Y.ROBINA Marks -150
S.INOSHIKA Marks -150
R.JANUSIYA Marks -149
S.THASMIYAN Marks -149
J. AAYISHA Marks -147
N.SARUJA Marks -147



V.PRAKSHITHA Marks -146
R.AARUSHI Marks -146
N.RASHIKA Marks -145
S.SHUHISHAN Marks -145
R.HARISH Marks -144
A.MATHUNILA Marks -144
T.RUTHIRASHREE Marks -144
T.YASHWINI Marks -144
L.ABINAYA Marks -144
S.ABISHNAVI Marks -144
S.MAATHANAN Marks -143



T.AHAANA Marks -143
R.DISHANUJA Marks -143
W.SANUYAN Marks -142
J.KAMSAJAN Marks -142
V.MEENUTHA Marks -141
S.SANGAVY Marks -141
M.MATHURAVARSHINI Marks -141
T.MIDUN Marks -140
G.GNANAKUGARSAN Marks -140
A.THIVANISHA Marks -140
R.AATHARSH Marks -140



K.PIRAKATHI Marks -140
D.VAISHNAVI Marks -140
Y.NISWIN Marks -139
S.THESHITHA Marks -139
T.KESHIKA Marks -139
J.RADSHAYAN Marks -139
K.SRIVATHSA SARMA Marks -139
P.THANOJH Marks -139
V.AJINIKAN Marks -138
M.HARSHANA Marks -138
T.HAMSHIKKAN Marks -137



V.THILAKSHAN Marks -137
A.PRANAVI Marks -136
A.ASWITHA Marks -135
S.SHANUJAN Marks -135
S.KAVIN Marks -134
M.VISHALIHKA Marks -134
K.THULASIKAN Marks -133
P.ARMITHA Marks -133
K.KARUNI Marks -133
J.AATHARSAN Marks -133
M.SAIHARIKARAN Marks -132



M.SIVAGOWRY Marks -132

## பெற்றோர், பாடசாலை சமூகம்

## யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

## புரிந்துணர்வின் தொடக்கமாகட்டும்!

தமிழர்கள் வாழும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் நீண்டகாலமாகநிலவிய ஒரு முக்கியமான கோரிக்கை மெல்ல மெல்ல நிறைவேறத் தொடங்கியிருக்கின்றது. அதாவது, இங்குள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ்மொழி பேசக்கூடிய பொறுப்பதிகாரிகள் நியமிக்கவேண்டும் என்ற மக்களின் குரலுக்கு இப்போதுதான் அரசாங்கம் கொஞ்சமேனும் செவிசாய்த்துள்ளது. கிளிநொச்சி, சாவகச்சேரி பொலிஸ் நிலையங்களில் . தமிழ்மொழி பேசக்கூடியவர்கள் பொறுப்பதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இன்னும் சில பொலிஸ் நிலையங்களுக்கும் இவ்வாறான தமிழ்மொழி பேசக்கூடியவர்களைப் பொறுப்பதிகாரிகளாக நியமிக்கும் நடவடிக்கைகளும் இடம்பெற்றுவருகின்றன.

பொலிஸ் நிலையம் என்பது மக்களுடன் தினசரி தொடர்பில் இருக்கும் நிர்வாக அமைப்பு. அங்கு வரும் ஒவ்வொரு குடிமகனும் தமது பிரச்சினையையும் முறைப்பாடுகளையும் தனக்குப் பரிச்சயமான தாய் மொழியில் வெளிப்படுத்தும் வசதி இருக்கவேண்டும். ஆனால் இதுவரை பல தமிழ்ப் பிரதேசங்களில் மொழித் தடையால் மக்களின் குரல் சரியாகப் புரிந்துகொள்ளப்படவில்லை. இதனால், நீதி தாமதமாகவும் தவறாகவும் வழங்கப்பட்ட சம்பவங்கள் ஏராளம். இது மக்களுக்கும் பொலிஸ் தரப்புக்கும் இடையே நம்பிக்கையின்மையை உருவாக்கியிருந்தது. இந்தநிலையில் தமிழ் பேசக்கூடிய பொறுப்பதிகாரிகளின் நியமனமானது, இந்த நம்பிக்கையீனத்தைக் களைந்து, நீதிக்கான வெளிச்சத்தை அதிகப்படுத்தியிருக்கிறது.

மொழி என்பது தொடர்பாடல் கருவி மட்டுமல்ல, அது பண்பாட்டு அடையாளமும் உணர்வின் வடிவமும் தான். ஒருவரின் தாய்மொழியில் அவர் பேசும் போது தான் அவரின் உணர்வு முழுமையாக வெளிப்படுகிறது. தமிழ்மொழி பேசும் பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டால், மக்களிடம் நெருக்கமும் புரிதலும் அதிகரிக்கும். இதன் மூலம் முறைப்பாடு செய்தல், சாட்சியமளித்தல், சட்ட ஆலோசனை பெறுதல் போன்ற செயல்முறைகள் எளிதாகும். அதேசமயம் பொலிஸாருக்கும் மக்களுக்குமிடையே ஒரு புரிந்துணர்வுநிலை உண்டாகுவதால் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணிகள் தடையின்றி நடைபெறும்.

கிளிநொச்சி, சாவகச்சேரி மட்டுமல்லாது அனைத்து தமிழ்ப் பிரதேசங்களிலும் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கும் தமிழ்ப் பொறுப்பதிகாரிகளை விரைவில் நியமிக்க வேண்டும். இது ஒரு நிர்வாக நடவடிக்கை மட்டுமல்ல; மக்களின் உரிமை செயற்பாடுமாகும். தமிழ்மொழியில் உரையாடும் பொலிஸ் நிலையம் என்பது மக்கள் பாதுகாப்பில் ஈடுபடும் உண்மையான மக்களாட்சி உருவாகும் தளமாகும். தமிழ்மொழி பேசும் பொறுப்பதிகாரிகள் நியமிக்கப்படுதலானது, வடக்குகிழக்கு மக்களின் குரல் கேட்கப்படுவதற்கான வழி திறக்கும் வரலாற்றுப் பயணத்தின் தொடக்கமாக அமையட்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

### நாளொரு நல்வார்த்தை

துணிவோடு செயற்படாத காரணத்தால்
உலகில் பல திறமைகள்
சிதறிப் போய்விடுகின்றன.

—சிட்னி ஸ்மித்—



## பதவி விலகிய மருத்துவர்களால் 1,277 மில்லியன் ரூபா நிலுவை!



தேசிய கணக்காய்வில் தகவல்

கொழும்பு,ஒக்.31

**சேவையை விட்டு விலகிய அரச மருத்துவ அதிகாரிகளிடமிருந்து, அரசாங்கத்துக்கு 1,277 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணம் நிலுவையில் உள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.**

பதவிகளைவிட்டு விலகிய மருத்துவ அதிகாரிகளிடமிருந்து, 2024 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31 ஆம் திகதிக்கு அரசினால் அறவிடப்படவேண்டிய பிணை முறி, தண்டப்பணம் மற்றும் கடன் முன்பண நிலுவைகள் ஆகியவற்றின் மொத்தத்தொகை ரூபா 1,277 மில்லியன் ஆகும்.

இந்த அதிகாரிகள் பிணைமுறி மற்றும் தண்டப்பணத்தை செலுத்தாமல் இருக்கும்போக்கு அதிகரித்துள்ளதாகவும், அவற்றை அறவிடுவதற்கான நடவடிக்கைகளில் பல பலவீனங்கள் இருப்பதாகவும் கணக்காய்வு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

2015ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு இறுதிவரை மொத்தம் 705 மருத்துவர்கள் ஒப்பந்தத்தை மீறியுள்ளனர் என்றும் கணக்காய்வின்போது தெரியவந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## சிறைக்கைதி உயிர்மாய்ப்பு

கொழும்பு,ஒக்.31

குளியாப்பிட்டிய சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதியொருவர் நேற்றுமுன்தினம் தூக்கிட்டு உயிர்மாய்த்துக் கொண்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் மீது கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த சந்தேகநபரின் சடலம் தற்போது குளியாப்பிட்டிய போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## ஆளுங்கட்சி எம்.பி.க்குப் பிடியாணை

கொழும்பு,ஒக்.31

இரண்டு வழக்குகள் தொடர்பாக நீதிமன்றத்தில் முன்னிலையாக தவறிய தேசிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் மனுவர்ணவைக் கைதுசெய்து முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு கோட்டை நீதிமன்றம் நேற்றுமுன்தினம் பிடியாணை பிறப்பித்துள்ளது. 2008ஆம் ஆண்டு முதல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இரண்டு வழக்குகள் தொடர்பிலே அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகத் தவறியுள்ளார். (ச-இ)

## மனம்பேரிக்கு மறியல் நீடிப்பு



கொழும்பு, ஒக். 31

மித்தெனியவில் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பியல் மனம்பேரிக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு வலஸ்முல்ல நீதிமன்றில் நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டபோது அவரை 12ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-இ)

## இந்தியாவுக்கான விசா: தூதரகம் நேரடிக் கையாள்கை

கொழும்பு,ஒக்.31

எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதி முதல் இந்தியாவுக்கான கடவுச்சீட்டு மற்றும் அனைத்துத் தூதரக சேவைகளும் நேரடியாகக் கையாளப்படும் என இலங்கைக்கான இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

அதன்படி இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம், கண்டி உதவி உயர்ஸ்தானிகராலயம் மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள துணைத் தூதரகம் ஆகியவற்றினால் குறித்த சேவைகள் நேரடியாகக் கையாளப்படும்.

தற்போது கையாளும் சேவை வழங்குநர் சேவை இன்று 31ஆம் திகதி வரை மட்டுமே இயங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ள (ச-இ)

நாளை
சனிக்கிழமை - ஐப்பசி 15
01.11.2025
சுபநேரம் : 03.03 - 04.33
ராகுகாலம் : 09.03 - 10.33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல் 2026

### ஓமந்தை கடைத்தொகுதி, ஓமந்தை மீன்கடை, ஓமந்தை கோழியிறைச்சிக்கடை என்பவற்றை நடாத்துவதற்கான கேள்வி அறிவித்தல்

1. வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை எல்லைக்குள் அமைந்த ஓமந்தை கடைத்தொகுதி, ஓமந்தை மீன்கடை, ஓமந்தை கோழியிறைச்சிக்கடை போன்றவற்றை 2026ஆம் ஆண்டு தை மாதம் 01ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை நடாத்துவதற்கான கேள்விகள் 2025.10.31 தொடக்கம் 2025.11.14 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2. கேள்விப்படிவங்கள் கீழ்க்காட்டப்படும் கேள்விப் பிணைப்பணம், கேள்விப் பத்திரக் கட்டணம் ஆகியவைகளைச் செலுத்தி இவ்வலுவலகத்தில் 2025.11.14 ஆம் திகதி பிற்பகல் 12.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்களில் ஒரு பிரதி "தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா" என்ற முகவரிக்கும், ஒரு பிரதி பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா" என்ற முகவரிக்கும், பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எதற்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரோ நேரத்திற்குப் பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. 2025.11.14 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசிலனை செய்யப்படும். கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும் போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்டவர் சமூகமாக இருக்க அனுமதிக்கப்படும்.
4. கேள்விதாரர் இலங்கைப் பிரஜையாகவும் வவுனியா மாவட்டத்தினை சேர்ந்தவராகவும் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருக்க வேண்டும். கறுப்பு நிரலில் உள்ளவருக்கு கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது.
5. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை, செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் என்பவற்றுடனும் சமூகமளித்தல் வேண்டும்.
6. குத்தகைக்காலம் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 2026 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியினை கொண்டதாக இருக்கும்.
7. ஓமந்தை கடைத்தொகுதி கடைகளில் வாகன திருத்தகம், இரும்பு ஒட்டு தொழிலகம், வெடி மருந்து உற்பத்திகள் விற்பனை, மீன், இறைச்சி கடை, அரைக்கும் ஆலை, மதுபானசாலை, உணவகம், தண்ணீர் கடை, சிகை அலங்காரம் போன்ற கடைகள் நடாத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.
8. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து சபையினால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் தங்களால் கோரப்படும் கேள்வித்தொகையில் 1/3 பகுதியையோ அன்றி முழுவதையுமோ காரியாலயத்தில் செலுத்தி கடைக்கான உடன்படிக்கையை பூர்த்தி செய்தல் வேண்டும்.
9. கேள்வித்தொகையின் மிகுதி 2/3 பகுதியினை 8 சம தவணைக்கட்டணங்களாக செலுத்துதல் வேண்டும். மாதாந்த கட்டுப்பணங்களை மாதம் முடிந்து ஐந்து நாட்களுக்குள் சபைக்குச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னதாக குத்தகைப்பணம் முழுவதும் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன் காலத்துக்குக் காலம் அரசாங்கத்தால் விதிக்கப்படும் VAT, NBT என்பனவும் செலுத்தப்படல் வேண்டும். இக்கால அவகாசத்திற்குள் குத்தகைப் பணத்தை செலுத்தத் தவறும் கேள்விதாரரின் வைப்புப்பணம் பறிமுதல் செய்வதுடன், கேள்வி விண்ணப்பம் சமர்ப்பித்து கேள்வியினை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு கேள்வி வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர்களது பெயர் கேள்விகோரும் தகுதியுடையவர்களின் நிரலிலிருந்து நீக்கப்படுவதுடன் கறுப்புப் பட்டியலிலும் சேர்த்துக் கொள்ளப்படும்.
10. ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கான வாடகைப் பணத்தினை மாதம் முடிந்து ஐந்து நாட்களுக்குள் சபைக்குச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
11. கேள்வி கோரும் போது சித்தி பெறும் குத்தகைப்பணத்தினை குறித்த கால எல்லைக்குள் கட்டுவதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.
12. கேள்வி அறிவித்தலுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைவாகவே கேள்விகளை அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரத்தில் கொடுக்கப்படும் விபரங்கள் உண்மையாகவும் சரியானவையாகவும் இருப்பதுடன் இவைகளை அத்தாட்சிப்படுத்தும் பொறுப்பும் கேள்விதாரரைச் சார்ந்தது. கேள்விப்படிவங்களைப் பெற முன்பும் அதற்குப் பின்பும் நிபந்தனைக்குரிய அத்தாட்சியினை சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருப்பது அவசியமானது.
13. இறைச்சி, மீன்கடைகளில் வழங்கப்படும் இறைச்சிகள், மீன்கள் சுத்தமாகவும், நோயற்ற இறைச்சியாகவும் நிறை சரியாகவும், சபையினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் விலை விகிதாசாரப்படியே பொது மக்களுக்கு விற்பனை செய்தல் வேண்டும். நடமாடும் மற்றும் கோழி வியாபாரிகள் அக் கடையிலிருந்து சுற்றுவட்டாரம் 500மீற்றர் தூரத்திற்குள் மீன் மற்றும் கோழி வியாபாரத்தில் ஈடுபடமுடியாது.
14. சுகாதாரப்பரிசோதகரால் அனுமதிக்கப்பட்ட இறைச்சி, மீனை மட்டுமே கடையில் வைத்து விற்பனை செய்தல் வேண்டும். இவை தவிர வேறு இறைச்சியையோ அல்லது உணவுக்கு ஒவ்வாத இறைச்சியையோ, மீனையோ விற்பனை செய்தால் அவ் இறைச்சியை, மீனை பறிமுதல் செய்வதுடன் ஒப்பந்தமும் இரத்து செய்யப்படும்.
15. தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு மேல் சித்திபெற்ற மாதாந்த கட்டுப்பணத்தினை செலுத்த தவறின் எதுவித அறிவித்தலுமின்றி குத்தகை இரத்துச்செய்யப்பட்டு ஒப்பந்த பிணைப்பணத்தினை சபையின் நிதியத்திற்கு மாற்றும் அதிகாரம் சபைக்கு அல்லது தலைவர் மற்றும் செயலாளருக்கு உண்டு.
16. இங்கு அறிவிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் ஒப்பந்த சரத்திற்கு அமைவாகவும் என்னால் காலத்திற்கு காலம் எழுத்து மூலம் விதிக்கப்படும் ஏனைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
17. யாதொரு காரணமும் காட்டாது கேள்வி முழுவதையுமோ, அல்லது கேள்வியின் பகுதியையோ ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கும் எனக்கும் உரிமையுண்டு.
18. மீன் விற்பனையைப் பொறுத்தமட்டில் மீன்கள் தரமானதாகவும் நல்லதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்தல் வேண்டும்.
19. உரிய நேரத்தில் கேள்விப்படிவங்களை சமர்ப்பிக்காத கேள்விதாரின் கேள்விப்பிணைப்பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.
20. குத்தகைக்கு எடுத்தவர் உபகுத்தகைக்கு விடுவது தெரியப்படும் சந்தர்ப்பத்தில் குத்தகை உரிமை இரத்துச் செய்யப்படும்.
21. குத்தகை எடுத்தவரே அலுவலக தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
22. மேலே சொல்லப்பட்ட கேள்வி நிபந்தனைகள் அனைத்தையும் ஒப்புக்கொண்டே கேள்விகள் அனுப்புதல் வேண்டும்.
23. மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாக சமூகமளித்து பெற்றுக்கொள்ளலாம்.

| இல | கடை விபரம் | 2026 கேள்வி கோரவேண்டிய தொகை | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | ஓமந்தை கடைத் தொகுதி - கடை 01 | | 4,100.00 | 2,000.00 | 25,000.00 |
| 2 | ஓமந்தை கடைத் தொகுதி - கடை 02 | | 2,450.00 | 2,000.00 | 25,000.00 |
| 3 | ஓமந்தை கடைத் தொகுதி - கடை 03 | | 2,450.00 | 2,000.00 | 25,000.00 |
| 4 | ஓமந்தை கடைத் தொகுதி - கடை 04 | | 2,450.00 | 2,000.00 | 25,000.00 |
| 5 | ஓமந்தை கடைத் தொகுதி - கடை 05 | | 2,450.00 | 2,000.00 | 25,000.00 |
| 6 | ஓமந்தை கடைத் தொகுதி - கடை 06 | | 4,100.00 | 2,000.00 | 25,000.00 |
| 7 | ஓமந்தை மீன் கடை | 100,000.00 | 3,250.00 | 2,000.00 | 25,000.00 |
| 8 | ஓமந்தை கோழியிறைச்சிக்கடை | 100,000.00 | 3,250.00 | 2,000.00 | 25,000.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் அல்லது 024-2050067 மற்றும் 024-2225737 எனும் தொலைபேசி மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.**

# யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு புதிய சமுர்த்திப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,ஒக்.31

யாழ்.மாவட்டப் புதிய சமுர்த்திப் பணிப்பாளராக பொன்னம்பலம் ஸ்ரீவர்ணன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனிடம், யாழ்.மாவட்டச் செயலகத்தில் வைத்து நேற்று நியமனக்கடிதத்தைப் பெற்றுக் கொண்டார். யாழ்.மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் சமுர்த்திப் பணிப்பாளராகத் தனது கடமைகளையும் பொறுப்பேற்றார். இவர் இதற்கு முன்னர் வடக்கு மாகாணசபையின் சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளராகவும் , வடக்கு மாகாணப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராகவும் கடமையாற்றியிருந்தார். (க-66)

# நூல் வெளியீடும் அறிமுக விழாவும்

யாழ்ப்பாணம்,ஒக்.31

காசிநாதன் விமலநாதனின், பஜனாமிர்தம் தொகுப்பு நூல் வெளியீடும், இனிய தமிழ் கற்போம் இந்து சமயம் அறிவோம் நூல் அறிமுக விழாவும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு டச்சு வீதி மீசாலை மேற்கு மீசாலையில் அமைந்துள்ள, பரமேஸ்வரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நீதி அமைச்சு மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு மத்தியஸ்த பயிற்றுநர் ப. சனாதனசர்மா கலந்துகொள்வார். தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையா ளர் க.முருகதாஸ் நூல் மதிப்பீட்டுரையை நிகழ்த்துவார். (க-159)

# சிறுவர்தினக் கொண்டாட்டமும் முதியோர் கௌரவிப்பு விழாவும்

கொடிகாமம், ஒக். 31

சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் அனுசரணையில், மீசாலை கிழக்கு சரஸ்வதி சிறுவர் கழகத்தின் ஏற்பாட்டில், சிறுவர்தினக் கொண்டாட்டமும் முதியோர் கௌரவிப்பு விழாவும் யோ.திசாணன் தலைமையில் மீசாலை கிழக்கு பொது நோக்கு மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம் பெறவுள்ளன. நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தென்மராட்சிப் பிரதேச செயலாளர் எஸ்.சி.சத்தியசோதி கலந்துகொள்ளவுள்ளார். (ச-25,159)



# பொலிஸாரின் வாகனம் மாங்குளத்தில் விபத்து

*யாழ்ப்பாணம், ஒக்.31*

*முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் மணவாளன் பட்டமுறிப்புக்கு அண்மித்த பகுதியில் பொலிஸாரின் வாகனம் ஒன்று நேற்று தடம்புரண்டு விபத்துள்ளானது. வீதியின் குறுக்கே மாடுகள் வந்ததால் குறித்த வாகனம் வீதியினை விட்டு விலகி விபத்துக்குள்ளா னது. விபத்தில் வாகனத்தில் பயணித்த பொலிஸார் சிறுகாயங்க ளுக்கு உள்ளானநிலையில் பொலிஸ் ஜீப் கடுமையாகச் சேதமடைந்தது. விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-19)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PFIRC
இந்தியாவின் புகழ்பெற்ற
பிரசாந்த் கருத்தரிப்பு
ஆராய்ச்சி மையம்
இப்போது
இலங்கையில்!

ஆயிரக்கணக்கான இலங்கையர்கள்
பெற்றோராகப் பெருமிதம்!



அதிநவீன கருத்தரிப்பு சிகிச்சைகளுடன்
RPIFC
ரோயல் பிரசாந்த்
கருத்தரிப்பு மையத்தின்
பிரம்மாண்ட திறப்பு விழா
அக்டோபர் 31, 2025 வெள்ளிக்கிழமை
இலவச கருத்தரிப்பு ஆலோசனை முகாம்
அக்டோபர் 31 மற்றும் நவம்பர் 1, 2025
இடம்: ரோயல் பிரசாந்த் மருத்துவமனை
நேரம்: காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை
IUI | IVF | ICSI | IMSI
ஆரம்ப விழாவை முன்னிட்டு
சிறப்பு சலுகைகள்!
பதிவு செய்ய, அழைக்கவும்: 0777 21 55 88
62, W.A.சில்வா மாவத்தை, வெள்ளவத்தை www.pfrcivf.lk

## வட மாகாண சபை

### 2026 ஆம் ஆண்டிற்கான நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

வட மாகாண சபைக்கு உட்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் உப அலுவலகங்களுக்கு 2026 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய வேலைகள், பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு **உள்ளூர் நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களாக பதிவு செய்ய விரும்பும் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உட்பட்ட தரம் வாய்ந்த நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களிடமிருந்து** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **2025 டிசம்பர் மாதம் 01 ஆம்** திகதிக்கு பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். விண்ணப்படிவங்கள் மற்றும் விபரங்களை வடமாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.np.gov.lk இல் தரவிறக்கம் செய்து அல்லது **மாகாண சபை வளாகம், A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.** எனும் முகவரியில் இயங்குகின்ற **மாகாணத் திறைசேரி** அலுவலகத்திலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைகளிலுள்ள நிதிக்கிளைகளிலும் பெற்றுக் கொள்ளமுடியும். மேலதிக விபரங்களுக்கு கணக்காளர், மாகாணத் திறைசேரி, வடமாகாணம். அவர்களுடன் தொலைபேசி இல. 0212213540 மூலம் தொடர்பு கொள்ளவும்.

**பிரதம செயலாளர்,**
**வட மாகாண சபை,**
**மாகாணசபை வளாகம்,**
**A9 வீதி, கைதடி,**
**யாழ்ப்பாணம்.**

## ஐப்பசி வெள்ளி உற்சவம் இன்று

யாழ்ப்பாணம், ஒக்.31

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் இரண்டாம் ஐப்பசி வெள்ளி உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது. மாலை 04.30 மணியளவில் சிறப்புப் பூஜை வழிபாடுகள் ஆரம்பமாகி வசந்த மண்டபப் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து நகுலாம்பிகாதேவி உள்வீதி உலா வருவார். (ச-66)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் வித்தியாலயப் பரிசளிப்பு விழா, பாடசாலை முதல்வர் திருமதி செந்தினி ஜெயக்குமார் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகக் கல்வியற்றுறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா, சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய வளவாளர் திருமதி ஷர்மிளா கணேசராசா, கௌரவ விருந்தினராக ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி நகுலராகினி தங்கராசா ஆகியோர் கலந்து கொள்வர். (ச-25)

பெண் பணியாள் தேவை
அச்சுவேலியில் அமைந்துள்ள வீடொன்றினைப் பராமரிப்பதற்கு பெண் பணியாள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
Whatsapp:- +47 967 17250
(CS/59749) J-1

## 'யாழ்ப்பாண மருத்துவ வரலாறு' நூல் வெளியீடு


யாழ்ப்பாணம், ஒக். 31

எழுநாவினால் வெளியிடப்பட்ட பா.துவாரகனின் 'யாழ்ப்பாண மருத்துவ வரலாறு' நூல் வெளியீட்டு நிகழ்வு யாழ்.பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் நாளை முதலாம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. யாழ்.போதனா மருத்துவமனை மன்றப் பணிப்பாளர் சபை உறுப்பினர் இ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் ஆசியுரையை யாழ். தென்னிந்தியத் திருச்சபை ஓய்நிலை பேராயர் வண.பேரருட் கலாநிதி எஸ். ஜெபநேசன், அறிமுகவுரையை யாழ்.போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி த.சத்தியமூர்த்தி, சிறப்புரையை அரசியல் ஆய்வாளரும் ஊடகவியலாளருமான ம.நிலாந்தன் , மதிப்பீட்டுரையை கோப்பாய் கல்வியியற் கல்லூரி ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர் மு.கௌரிகாந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
16 . 10 . 1948



ஆண்டவன் அடியில்
01 . 10 . 2025

## அமரர் முருகன் சின்னத்துரை

எங்கள் குடும்பத்தின் தலவிருட்சமே!
என்றென்றும் எங்களுடன் இணைந்திருப்பீர்கள்
என எண்ணிலாக் கனவுகள் கண்டிருந்தோம்
இடையில் எம்மை விட்டுவிட்டு - ஏன் அப்பா மறைந்தீர்கள்
காலன் உங்களைக் காலத்தால் அழைத்த வேளை
அத்துன்பத்தை ஏற்றுக்கொள்ள எங்களால் முடியவில்லை
விதி செய்த சதிதானோ என்று எம் மனது எண்ணினாலும்
எம் இதயங்களில் என்றும் நீங்கள் குடியிருப்பீர்கள் ...

வன்னியசிங்கம் வீதி,
கைதடி வடக்கு
கைதடி

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 59744) E

# ஆதன உரிமை பெயர் மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை : பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் : தனபாலசிங்கம் சிவகுமார் பெண் மணிமாலா
சபை ஆதனவரி பதிவேட்டின்படி பெயர் : ஏகாம்பரம் பெண் சிவபாக்கியம்
முகவரி : ஆதன இல: 159, அம்மன் வீதி, வட்டாரம் - 06

வட்டாரம் 06, அம்மன் வீதி, ஆதன இல: 159 இல் அமைந்துள்ள ஆதன உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு சங்கானைக் கோவில்பற்று சங்கானை இறை "காலையடி" எனும் பெயருள்ள நிலப்பரப்பு இரண்டு விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம்.

சங்கானை மேற்கு மாரிமுத்து அருணாசலம், பெண் செல்லம்மா ஆகியோரால் பிரசித்த நொத்தாரிசு க.சோமசுந்தரம் முகதாவில் 7532/1966.03.28ஆம் திகதிய சீதன உறுதிப் பிரகாரம் கந்தையா ஏகாம்பரம் பெண் சிவபாக்கியத்திற்கு வந்தடைந்து. பின்னர் பிரசித்த நொத்தாரிசு க.இராமலிங்கம் முகதாவில் 5853/1977.08.07 ஆம் இலக்க அறுதி உறுதிப் பிரகாரம் கந்தையா ஏகாம்பரமும் பெண் சிவபாக்கியம் ஆகியோரிடமிருந்து முத்துக்குமாரு இலட்சுமணனுக்கும் பெண் சிவனேஸ்வரிக்கும் வந்தடைந்து.

பிரசித்த நொத்தாரிசு S.V.சோமசுந்தரம் முகதாவில் 16463/1991.08.17ஆம் இலக்க அறுதி உறுதிப்படி முத்துக்குமாரு இலட்சுமணனும் பெண் சிவனேஸ்வரி ஆகியோரிடமிருந்து மகேந்திரன் கைம்பெண் சிற்சபாநாயகிக்கு வந்தடைந்து. 16716/1992.10.17ஆம் இலக்க அறுதி உறுதிப்பிரகாரம் மகேந்திரன் கைம்பெண் சிற்சபாநாயகி ஆல் முத்துக்குமாரு இலட்சுமணனுக்கும் பெண் சிவனேஸ்வரிக்கும் வந்தடைந்து.

மேற்படி காலையடி இறையின் நிலப்பரப்பு 05 குளி 00 கந்தையா ஏகாம்பரம் மற்றும் சிவபாக்கியம் ஏகாம்பரம் என்பவர்களிடமிருந்து பிரசித்த நொத்தாரிசு பாலசிங்கம் முகதாவில் 546/1993.04.12ஆம் இலக்க உறுதிப் பிரகாரம் முதலாம், இரண்டாம் பேர்களின் சீவியவுரித்துக்கமைவாக மீரா ஏகாம்பரத்துக்கு வந்தடைந்து பிரசித்த நொத்தாரிசு இராமலிங்கம் செந்திற்குமரன் முகதாவில் 72/24.11.2003ஆம் இலக்க அறுதி உறுதிப் பிரகாரம் ஈஸ்வரன் சிதம்பரப்பிள்ளையும் பெண் மீராவும் (ஏகாம்பரம் மகள்) கந்தையா ஏகாம்பரமும் பெண் சிவபாக்கியமும் ஆகியோரிடமிருந்து நில.பர 05 குளி 00 சிவகுமார் பெண் மணிமாலாவுக்கு வந்தடைந்தது.

பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் 8430/2011.11.09ஆம் இலக்க அறுதி உறுதிப் பிரகாரம் முத்துக்குமாரு இலட்சுமணனதும் பெண் சிவனேஸ்வரியினதும் தத்துவகாரர் தம்பையா கிருஷ்ணகோபால் என்பவரால் சர்மா கைம்பெண் பராசக்திக்கும் தனபாலசிங்கம் சிவகுமார் பெண் மணிமாலாவுக்கும் வந்தடைந்து. பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் 9723/2022.02.22ஆம் இலக்க சீவியவுரித்து கைதுறத்தல் சாதனம் உறுதிப் பிரகாரம் பண்டத்தரிப்பு சர்மா கைம்பெண் பராசக்தி ஆகிய சிவிய உரித்துக்கமைவாக தனபாலசிங்கம் சிவகுமார் பெண் மணிமாலாவுக்கு சொந்தமும் நிந்தமும் ஆட்சியுமானது.

பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட ஒன்றுபடுத்தல் சாதனம் மூலம் 9724/2022.02.22ஆம் இலக்கத்தின்படி தனபாலசிங்கம் சிவகுமார் பெண் மணிமாலாவுக்கு நிலப்பரப்பு 07 குளி 00 விஸ்தீரணமுள்ள ஆதனம் வந்தடைந்தது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் S.சிவராசா அவர்களால் வரையப்பட்ட 1857 ம் இலக்க 03.03.2022ம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 06 குளி 9.39 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு

வடக்கு - நான்கு முழ அகலம் கொண்ட பாதையும் பஞ்சலிங்கம் நாகராசா பெண் ரஞ்சினியின் ஆதனமும்
கிழக்கு - வினாயர் சின்னையாவின் உரிமைக்காருக்குரிய ஆதனம்
மேற்கு - றோட்டும்
தெற்கு - ஆறுமுகம் தங்கராசவுக்கும் ஜெயராசா ஜெயராசா சிவசக்திக்குமுரிய ஆதனமும்


மேற்குறித்த ஆதனத்தை தனபாலசிங்கம் சிவகுமார் பெண் மணிமாலா என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்**

(CS 59767) E

# ஐந்தாம் சிரார்த்த தினம்

தோற்றம்
10 . 05 . 1942



மறைவு
26 . 10 . 2020

## அமரர் கிருஸ்ணபிள்ளை அருணகிரிராசா

**திதி: வளர்பிறை தசமி (31.10.2025)**

அந்த நிம்மதியான சிரிப்பும்,
சுருக்கம் நிறைந்த முகமும்,
இன்று நினைவாக மட்டும் மிதக்குது,
எங்கள் மனக் கடலில் அலையாக...

காலம் நகர்ந்தாலும், நினைவு மங்கவில்லை,
நீங்கள் விட்டுச் சென்ற வழி தான் எங்கள் வெளிச்சம்.
விழுந்த போதும் எழுந்து நிற்கச் சொல்லியாய்,
“வாழ்க்கை ஒரு போராட்டம்” என்றீர்கள்.

உங்கள் குரல் இப்போது காற்றில் கலந்து,
எங்கள் காதில் நிசப்தமாக ஒலிக்குது.
உங்கள் பாதங்கள் எட்டிய மண்ணில்தான்,
நாங்கள் இன்னும் நிம்மதியாய் நிற்கிறோம் அப்பா.

நீங்களில்லா நாளும் உங்களாலே நிறைந்தது,
உங்கள் அன்பு எங்கள் இதயத்தில் உறைந்தது.
வாழ்வின் ஒவ்வொரு மூச்சிலும்,
உங்களையே நாம் தேடுகிறோம் அப்பா...

பாரதி வீதி, கம்பர்மலை
வல்வெட்டித்துறை

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 59750) E

# மரண அறிவித்தல்

தோற்றம்
16 . 12 . 1940



மறைவு
29 . 10 . 2025

## பசுபதிப்பிள்ளை வீரலக்குமி

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பசுபதிப்பிள்ளை வீரலக்குமி கடந்த 29.10.2025 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் அவர்களின் மருமகளும், காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் அமிர்தலிங்கம், சிவலிங்கம், இளமுருகன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், குலநந்தினி, நந்தகுமாரன் (UK), காலஞ்சென்ற குலமோகினி ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமானந்தன், ஜெயமதி (UK) ஆகியோரின் அன்பு மாமியாரும், ராகவன், ஆதவன், ஆதித்தன் (UK), ஆரணி (UK), லக்ஷ்மி (UK) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவருடைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 718 5955 - கோபால்
074 087 4726 - நந்தினி

தகவல்
குடும்பத்தினர்.

(CS 59768) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப்புலவர் சங்கத்தால் மாணவர்களுக்குப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.31

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் 63ஆவது பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு நடத்தப்படவுள்ள போட்டிகள் வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் சைவப்புலவர் கா. கமலநாதன் தலைமையில் கதாப்பிரசங்கம், புராணபடனம், சொற்பொழிவு போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளன. எனவே போட்டிகளில் பங்குகொள்ளும் மாணவர்கள் உரிய நேரத்துக்குச் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

**வாகன சாரதியாளர் தேவை**

**Route:**
கொழும்பு, யாழ்ப்பாணம்
**வாகனம்:** லொறி
Contact No:
**0777 222 176**
(CS 30646)A

**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை**

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் கடைகளுக்கு பொருட்கள் விநியோகிப்பதற்கு பணியாளர்கள் தேவை.
மோட்டார் சைக்கிள் வைத்திருப்போர் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:- **071 175 5665**

# மணிவிழா

யாழ்ப்பாணம், ஒக். 31

கோப்பாய் வடக்கு ஜே/262 கிராம அலுவலர் சுப்பிரமணியம் சண்முகவடிவேலின் மணிவிழா நிகழ்வு கோப்பாய் சித்திரவேலாயுத சுவாமி கோவில் திருமண மண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு மணிவிழாக்குழுத் தலைவர் ச.கவிதன் தலைமையில் இடம்பெறும். (ச-25)

# போட்டிப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக்.31

வடக்கு மாகாண பொதுச் சேவையின் வருமானப் பரிசோதகர் தரம் III பதவிக்கு, ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை நாளை சனிக்கிழமை வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும்.


பரீட்சைக்கு விண்ணப்பித்த, தகைமையுடைய சகல பரீட்சார்த்திகளுக்குமான அனுமதி அட்டைகள் வடக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் 'செயலாளர், மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்' எனும் முகவரியுடன் நேரிலோ அல்லது 0212219939 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொள்ளுமாறு வடக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆ.சிறி அறிவித்துள்ளார்.

அனுமதி அட்டையுடன் பிரவேசிக்கும் விண்ணப்பதாரிகள் மட்டுமே குறித்த பரீட்சைக்குத்தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-66)

## மரண அறிவித்தல்

### தியாகராஜா சிவகடாட்சம்

**(ஓய்வுபெற்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்) வலி, கிழக்கு பிரதேச சபை - புத்தூர்**



பருத்தித்துறை மருதடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா சிவகடாட்சம் அவர்கள் நேற்று முன்தினம் 29.10.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தியாகராஜா - பராசக்தி தம்பதியரின் அருமை மகனும், பாலகிருஷ்ணர் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், விஜயராணியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை - கலட்டி றோமன்கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை) அன்புக் கணவரும், சிவனிகாவின் (முகாமைத்துவ மற்றும் வணிக கற்கைகள் பீடம் - யாழ். பல்கலைக்கழகம், 3ம் வருடம்) பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2025) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 46194)A

## மரண அறிவித்தல்

தோற்றம்
16 . 12 . 1940



மறைவு
29 . 10 . 2025

### பசுபதிப்பிள்ளை வீரலக்குமி

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பசுபதிப்பிள்ளை வீரலக்குமி கடந்த 29.10.2025 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் அவர்களின் மருமகளும், காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் அமிர்தலிங்கம், சிவலிங்கம், இளமுருகன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், குலநந்தினி, நந்தகுமாரன் (UK), காலஞ்சென்ற குலமோகினி ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமானந்தன், ஜெயமதி (UK) ஆகியோரின் அன்பு மாமியாரும், ராகவன், ஆதவன், ஆதித்தன் (UK), ஆரணி (UK), லக்ஷ்மி (UK) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவருடைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 718 5955 - கோபால்
074 087 4726 - நந்தினி

தகவல்:
குடும்பத்தினர்.





யா/ஹிபேக் கல்லூரியில் பிரதி அதிபராக இரண்டு வருடங்கள் கடமையாற்றி இன்று (31.10.2025) யா/வரணி கரம்பக்குறிச்சி அ.த.க. பாடசாலையின் அதிபராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும்

**திருமதி யாழினி முரளி SLPS III**

அவர்களை பாராட்டுவதோடு அவர்பணி சிறப்பாக தொடர வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
பழைய மாணவர் சங்கம்
யா/ஹிபேக் கல்லூரி

(CR 46195)A

## மரண அறிவித்தல்



### செல்வி கமலாட்சி சரவணமுத்து

கல்வயலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கமலாட்சி சரவணமுத்து அவர்கள் நேற்று (30.10.2025) வியாழக்கிழமை கல்வயல் பெருங்குளம் வீரகத்தி விநாயகர் பாதங்களை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - நீலாயதாக்ஷி தம்பதியினரின் இளைய மகளும், முருகையா (முருகு), கந்தராசா, முத்தாச்சி ஆகியோரின் பாசமிகு தங்கையுமாவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் கல்வயலில் அவரது இல்லத்தில் இன்று (31.10.2025) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 30647) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதை...

ஒன்றே அவர்களுக்கு முன்புள்ள தெரிவு - இவ்வாறு ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.
போதைப்பொருள்களை நாட்டில் இருந்து முற்றாக ஒழிக்கும் தேசிய ரீதியிலான செயற்றிட்டம் ஜனாதிபதி அநுர தலைமையில் கொழும்பில் நேற்று ஆரம்பமானது.
இதன்போது ஜனாதிபதி அநுர மேலும் தெரிவித்ததாவது:-
எமது நாட்டை ஆக்கிரமித்துள்ள பேரழிவைத் தோற்கடிப்பதற்காக அனைவரும் ஒன்று திரண்டிருக்கிறோம். இந்தப் பேரழிவு எந்தளவு ஆழமானது மற்றும் நாசகரமானது என நாம் அறிவோம். எமது பிள்ளைகள் எமது சமூகம் என்பன இந்த மாயப் பேரழிவுக்கு இரையாகி வருகின்றன. இது தற்பொழுது உருவானதொன்றல்ல. பல தசாப்தங்களாக வளர்ந்து, முழுச் சமூகத்துக்குள்ளும் புரையோடிப் போயுள்ளது. இதை மாற்ற வேண்டும். போதைப்பொருள் மாபியாவுக்கு எதிராக முழுமையான போராட்டம்தான் இந்த நிலைமையை மாற்றுவதற்கான வழியாக அமையும்.
வீதி விபத்துக்களில் அநேகமானவை போதைப் பொருள்களுடன் தொடர்புபட்டவையாக உள்ளன. எமது நாட்டில் சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான வன்முறைகளில் அதிகமானவை போதைப்பொருள்கள் சார்ந்தவை. பொது இடங்களில் விபரீதமான பாலியல் ஆசைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. இந்த பேரழிவு நாட்டில் பெரும் வீழ்ச்சியை உருவாக்குகிறது. கறுப்புப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வர்த்தகமாக இது மாறியுள்ளது.
போதைப்பொருள் மாபியாக்களிடம் ஆயுதங்கள் உள்ளன. அரசிடம் இருக்க வேண்டிய ஆயுதங்கள் எவ்வாறு அவர்கள் கைகளுக்குச் சென்றன? சில இராணுவ முகாங்களில் இருந்தும் துப்பாக்கிகள் அவர்களின் கைகளுக்குச் சென்றுள்ளன. அதில் சுமார் 35 துப்பாக்கிகள் மீளப் பெறப்பட்டுள்ளன. அதற்குப் பயன்படுத்தும் ரவைகள் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பான விசாரணைகளில் பொலிஸ் அதிகாரிகளின் தொடர்பு வெளிப்பட்டுள்ளது. இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் என்பன இதனைத் தடுக்க பெரும் பங்காற்றுகின்றன. ஆனால் விரல்விட்டு எண்ணக் கூடியவர்கள் அந்தக் கும்பலின் பணபலத்தில் சிக்கியுள்ளனர்.
இந்த நாட்டில் இரண்டு ஆட்சிகள் இருக்க முடியாது. மக்களின் ஜனநாயக ஆணையால் உருவான ஆட்சி மாத்திரமே இருக்க முடியும். கறுப்பு ஆட்சி ஒழிக்கப்படும் என உங்களுக்கு உத்தரவாதம் அளிக்கிறோம். இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் தீர்க்கமான நேரம் வந்துவிட்டது. நாம் இதனைச் செய்யாவிட்டால் வேறு யாரும் செய்ய மாட்டார்கள் என எம்மிடம் பலரும் கூறியுள்ளனர். இதனை மாத்திரம் நிறைவேற்றுங்கள் புண்ணியம் கிடைக்கும் என சில தாய்மார் கூறுகின்றனர். பொலிஸ் மா அதிபர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் பலரும் இது தொடர்பில் கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்களின் கோரிக்கைகள், எதிர்பார்ப்புகள், மன்றாட்டங்கள் என அனைத்தும் நிறைவேற்றப்படும் - என்றார். (அ-ம-44)

## பட்டா...

ஆலயத்தில் வழிபட்ட பின்னர், பிரதான வீதியில் ஏறியபோது நிலைதடுமாறி விழுந்துள்ளார். இதன்போதே பட்டா ரக வாகனம் அவரை மோதியுள்ளது. படுகாயமடைந்த இளைஞர் பட்டா வாகனத்தின் சாரதியால் மீட்கப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பில் சாவகச்சேரிபொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-131)

## செம்மணிப்...

ஏற்பாட்டில், 'செம்மணி மனிதப் புதைகுழியை மீண்டும் மூடி மறைப்பதை நிறுத்து: உண்மையை வெளிப்படுத்து' எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.
இதன்படி, பிற்பகல் ஒரு மணியளவில் ஆர்ப்பாட்டமும், அதைத் தொடர்ந்து பிற்பகல் 3 மணியளவில் தந்தை செல்வா கலையரங்கத்தில் கருத்தரங்கும் இடம்பெறவுள்ளன. (அ-ம-26-66)

## சந்தேகநபர்கள்...

குண்டை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் சந்தேகநபர்களாக அடையாளம் காணப்பட்டனர். அவர்கள் மூவரும் இந்தியாவுக்குத் தப்பிச் சென்ற நிலையில், ஆவணங்கள் இல்லாமல் தங்கிநின்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டனர். கட்டுநாயக்க வழியாக நாடு திரும்பியபோதே, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் மூவரும் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு தற்போது மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (அ-ம-இ)

## செம்மணிப் புதைகுழிக்கு...

பேரணி ஆரம்பமாகிச் செம்மணி வளைவுப் பகுதியைச் சென்றடைந்தது. அதனைத் தொடர்ந்து அங்கு அமைந்துள்ள அணையா விளக்கு நினைவுத் தூபியடியில் மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து வேண்டுதலும் நடைபெற்றது.
போராட்டத்திலும், செம்மணி உடனிருப்பு வேண்டுதலிலும் இலங்கையின் பல்வேறு மாவட்டங்களின் மறைமாவட்ட ஆயர்கள், கிறிஸ்தவ மதகுருமார்கள், அருட் சகோதரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-ம-66-20-26)

## வீட்டார்...

மாறியுள்ளார். ஒருகட்டத்தில் வட்டிக்குப் பணம்பெற்று பப்ஜி விளையாட்டில் ஈடுபட்டு வந்த அவருக்கு ஒரு கோடி ரூபாவுக்கு மேல் கடன் அதிகரித்துள்ளது. கடன் வழங்கியவர்கள் கடனை மீளக் கேட்டபோது, காணியை விற்று அந்தக் கடனை இளைஞரின் வீட்டார் செலுத்தியுள்ளனர். இதற்குப் பின்னரும், அந்த இளைஞர் பப்ஜி விளையாடுவதற்கு முனைந்துள்ளார். இதற்காக, ஐந்து லட்சம் ரூபாவை வீட்டாரிடம் கோரியுள்ளார். அவர்கள் மறுத்ததைத் தொடர்ந்தே, கடந்த 25ஆம் திகதியன்று அவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்க்க முயற்சித்துள்ளார்.
இதன்போது காப்பாற்றப்பட்ட அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## தென்மறவர்களின்...

டம் இன்று ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக்கான கிண்ணம் அறிமுகம் செய்யும் நிகழ்வும், சீருடை அறிமுகம் செய்யும் நிகழ்வும் சாவகச்சேரி ட்றிபேர்க் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளின் பழைய மாணவ அணியினர் அனுசரணை வழங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-28-131)

## பட்ஜெட்டை...

பரிசீலனையில் ஈடுபடவுள்ளது. தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நவம்பர் மாதம் 5ஆம் திகதி வவுனியாவில் கூடவுள்ளது. இதன்போதே, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் பட்ஜெட் தொடர்பிலும் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-110)

## யாழ்...

சி.வீ.கே.சிவஞானம் குற்றஞ்சாட்டியுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னைய கட்டடத்துக்குக் கிழக்குப் பக்கமாக இருந்த வாசலுக்கு எதிராக ஒரு பெரிய கட்டடம் இருந்தது. அந்தக் கட்டடமும் மாநகரசபையின் அலுவலகமாக இருந்தது. அது ஒரு கொள்வனவு செய்யப்பட்ட கட்டடம். ஆனால் அண்மையில் அதனை தற்செயலாக பார்த்தபோது அது மாநகர சபையினுடைய சொத்து என்ற நிலையில் இல்லாமல், வேறு பலர் ஆதிக்கம் செலுத்தக்கூடிய நிலையில் இருந்தது. அதை ஆராய்ந்த பொழுது அந்த சொத்துக்கு 'கள்ள உறுதி' முடிக்கப்பட்டு மாநகர சபையினுடைய ஆதன வரிப் பதிவேடுகளில் கூட பதிவு மாற்றம் செய்யப்பட்டதாக நம்பகரமாக தகவல்கள் கிடைத்திருக்கின்றன. மக்களுடைய சொத்துக்கு ஏற்பட்ட நிலை பற்றி மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பதற்காகவே இந்த ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளேன்.
இந்த ஆதனம் அப்போது வாடி வீடு இருந்த வீதி, முன்னர் முகப்பு வீதி என அழைக்கப்பட்டு பின்னாளில் இராசேந்திர பிரசாத் வீதி என மாற்றப்பட்ட வீதிக்கு அடுத்ததாக அமைந்திருந்தது. அந்தக் கட்டடத்தின் மேல் பகுதியிலேயேதான் பொதுநூலக ஸ்தாபகர் செல்லப்பா பொதுநூலகத்தை ஆரம்பித்து வைத்தார். அதற்கு ஆதாரமாக யாழ். மாநகர சபையின் வெள்ளிவிழா மலரை குறிப்பிடலாம். அந்த மலர் வெளியிடும் போது யாழ்.மாநகரசபையில் கணக்காளராக நான் இருந்தேன்.
குறித்த காணி தனியாரின் காணியாக இருந்தது. யாழ். மாநகரசபை, நகர சபையாக இருந்த காலத்தில் அந்த கட்டடம் தேவை கருதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த புத்தகத்திலே கொள்வனவு செய்த கட்டடங்கள் என்று பட்டியலில் களஞ்சியசாலை வசதிக்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
இது சம்பந்தமாக கடந்த 23ஆம் திகதி மாநகர சபை ஆணையாளருக்கு ஒரு கடிதம் எழுதி நடவடிக்கைக்கு வலியுறுத்தியுள்ளேன். இந்த விடயத்தை வடமாகாண ஆளுநரின் கவனத்துக்கும் கொண்டுசென்றுள்ளேன். 2006ஆம் ஆண்டுக்குப் பின்னரே தான் இந்த இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதுபற்றைவளர்ந்து மாநகரசபையின் சொத்தாகவே பார்க்கப்படவில்லை. தற்போது அங்கு தற்காலிக வியாபார நிலையம் ஒன்று இயங்குகிறது. அதைக் குத்தகைக்கு கொடுத்திருக்க வாய்ப்பில்லை.
குறித்த விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த மோசடிக்கு யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்? என்ற விடயம் வெளிப்படுத்தப்பட வேண்டும் - என்றார். (அ-ம-26)

## நாணய...

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மாநாடொன்று அனுராதபுரத்தில் நேற்று இடம்பெற்றது. ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த இதன்போது தெரிவித்ததாவது:-
பாடசாலைகளின் நேரத்தை நீடிக்கும் விடயம் தவறானதொரு முன்னுதாரணமாகும். இதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ள போதிலும், தாம் நினைத்ததைச் சாதிப்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. அரசாங்கத்துக்கு மக்களாணை உள்ளது என்பதற்காக தான்தோன்றித்தனமாகச் செயற்பட முடியாது. தன்னிச்சையான செயற்பாடுகளை மக்கள் அனுமதிப்பதில்லை. அதற்கு ஆணை வழங்குவதுமில்லை.
அடுத்த வருடம் 200 மில்லியன் டொலர் நிதி உலக வங்கியால் அரசுக்கு வழங்கப்படவுள்ளது. கல்வி மறுசீரமைப்பு அதன் பிரதான நோக்கமாகும். அந்த நிதியைப் பெறுவதற்காகவே, பாடசாலைகளின் நேரத்தை நீடிக்க முனைகின்றனர். அதேபோன்று சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைதான் ஆசிரியர்களின் தொகையைக் குறைப்பதாகும். அதன் அடிப்படையிலே கடந்த வருடத்தில் வடமேல் மாகாணத்தில் 8 பாடசாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இவ்வாறான விடயங்களை நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரக் குறைபாடுகள் 3 கடைகளுக்குச் 'சீல்'

மன்னார்,ஒக்.31

மன்னார் நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில், பல்வேறு சுகாதாரக் குறைபாடுகளுடன் இயங்கிய உணவகம், வெதுப்பகம் மற்றும் வர்த்தக நிலையம் உள்ளிட்ட மூன்று கடைகளுக்குச் சீல் வைக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் உணவகங்கள் தொடர்பான ஆய்வு நடவடிக்கையின்போது, மன்னார் மூர் வீதியில் சுகாதாரமற்ற முறையில் உணவுகளைக் களஞ்சியப்படுத்தி,உரிய அனுமதி பெறாது இயங்கிய உணவகம் ஒன்றுக்கும், மன்னார் உப்புக்குளம் பகுதியில் பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கிய வெதுப்பகம் ஒன்றுக்கும், மன்னார் பனங்கட்டு கொட்டு மேற்குப் பகுதியில் இயங்கிய ஒரு வர்த்தக நிலையத்துக்கும் இவ்வாறு சீல் வைக்கப்பட்டுள்ளன. (க-56)

# வீதித் திருத்தம் தொடர்பில் மக்களிடம் கருத்து

யாழ்ப்பாணம்,ஒக்.31

ஆவரங்கால் - தொண்டைமானாறு வீதித் திருத்தம் தொடர்பில், மக்களிடம் கருத்துகள் நேற்றுக் கேட்கப்பட்டன.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகம், வலிகாமம் கிழக்குப் பிரதேசசபை ஆகியவற்றின் அதிகாரிகள் மக்களிடம் நேரடியாகக் களப்பயணம் மேற்கொண்டு கருத்துகளைக் கேட்டறிந்தனர். (க-23)

## மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ



கலைக்குரிசில், சிற்பரசன், சிற்பகலாஜோதி, சிற்பகலாவாரிதி
**ஸ்தபதி நடராசா சற்குருநாதன் (குரு) ஆச்சாரியார்**
(ஸ்தாபகர் திர்ஷிகா கலைக்கூடம்)

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திர்ஷிகா கலைக்கூட ஸ்தபதியார் நடராசா சற்குருநாதன் (குரு) நேற்று (30.10.2025) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

தகவல்: குடும்பத்தினர்.

ச.வர்க்கீசன் (மகன்) 077 808 9782
ச.விதுர்ஷன் (மகன்) 077 801 0336
க.கருணராஜ் (மருமகன்) 077 942 7543
ம.நிஷாந்தன் (மருமகன்) +358 40 0265282

(CS 30648) A

# முச்சக்கரவண்டி, கார் சாரதிகளுக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஒக்.31

ஜனாதிபதி செயலக அனுசரணையுடன், தூய இலங்கை தேசிய திட்டத்தின்கீழ், சுற்றுலாத் துறையில் பணிபுரியும் முச்சக்கரவண்டி மற்றும் கார்ச் சாரதிகளின் நெறிமுறைகள் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கான மனப்பாங்கு மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு யாழ்.பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத் தளங்களைக்கொண்ட இடங்களில் 900 முச்சக்கரவண்டி மற்றும் கார்ச் சாரதிகளுக்குக் குறிக்கப்பட்ட நாளில் காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

அதற்கமைவாக நாளையும், நாளை மறுதினமும் யாழ்ப்பாணம் மாநகரசபை, நல்லூர்ப் பிரதேசசபை, வலி கிழக்குப் பிரதேசசபை, வலி.தெற்குப் பிரதேசசபை ஆகியவற்றிலும், எதிர்வரும் 8, 9 ஆம் திகதிகளில், மானிப்பாய் பிரதேசசபை, காரைநகர் பிரதேசசபை, வேலணைப் பிரதேசசபை, பருத்தித்துறை நகரசபை ஆகியவற்றிலும், எதிர்வரும் 13,14 ஆம் திகதிகளில் நெடுந்தீவு பிரதேசசபை யிலும், எதிர்வரும் 15,16 ஆம் திகதிகளில் சாவகச்சேரி நகரசபை, கரைச்சிப் பிரதேசசபை, பூநகரிப் பிரதேசசபை ஆகியவற்றிலும், எதிர்வரும் 22, 23 ஆம் திகதி களில் கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை, வவுனியா மாநகரசபை, செட்டிகுளம் பிரதேசசபை ஆகியவற்றிலும், எதிர்வரும் 29,30ஆம் திகதிகளில் துணுக்காய் பிரதேசசபை, மன்னார் நகரசபை, நானாட்டான் பிரதேசசபை ஆகியவற்றிலும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (க-159)

## மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 02 . 1955



மறைவு
27 . 10 . 2025

**சுபத்திரா தனபாலசிங்கம்**

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுபத்திரா தனபாலசிங்கம் அவர்கள் கடந்த (27.10.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - இரத்தினம் தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், தனபாலசிங்கம் (ஓய்வு பெற்ற பிரதம நூலகர் பொது நூலகம், யாழ்ப்பாணம்) அவர்களின் அருமைத் துணைவியும், மயூரி (பிரான்ஸ்), துளசிகா (ஆசிரியை, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பகீரதன் (பிரான்ஸ்), பிரசாத் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (பாலா - சுவிஸ்) மற்றும் விஜயரத்தினம் (விஜி, ஜேர்மனி), ஜெகராசா (ராசன் - பிரான்ஸ்), காலஞ்சென்ற தேவராசன் (தேவு, முன்னாள் மின்சார சபை ஊழியர்) மற்றும் புஸ்பராசா (ராசா - பிரான்ஸ்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், மனோரஞ்சினி (ரஞ்சி), காலஞ்சென்ற இந்திராதேவி (இந்தி) மற்றும் தவலெட்சுமி (தவம் - ஜேர்மனி), ஜெயலட்சுமி (பாப்பா - சுவிஸ்), வசந்தலதா (ஜேர்மனி), நகுலாதேவி (நகுலா - பிரான்ஸ்), வசந்தி குலகேதீஸ்வரி (செல்வி - பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், முத்துராசா - கனகாம்பிகை தம்பதிகள், ஜெகநாதன் - சந்திரவதனா தம்பதிகள் ஆகியோரின் சம்பந்தியும், டிவ்வியன், பிரணவ் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், தவபாலன் (கண்ணன்), கீதா, பிரதீபன், விவிதன், சினேகா, மியூக்கி, சறோய், கேஷானி, மார்க், கோபிகா, மக்சிம், யோகரூபன், சிந்துஜா, யூலி, சில்வி, வெர்ஜினி ஆகியோரின் ஆசை அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2025) வெள்ளிக்கிழமை இல. 66, செம்மணி ஒழுங்கை, அரியாலை என்னும் விலாசத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**இல. 66 செம்மணி வீதி,**
**அரியாலை.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 117 8753**

(CS/59771) J-1

## மரண அறிவித்தல்

மண்ணில்
12 . 10 . 1941



விண்ணில்
30 . 10 . 2025

**பத்மநாதன் சம்பூரணம்**

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் இல.190, இராசவீதி, கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் சம்பூரணம் 30.10.2025 அன்று இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் பொன்னம்பலம் - கற்பகப்பிள்ளையின் அன்பு மகளும் பத்மநாதனின் அன்பு மனைவியும் சபாரத்தினம் - பூரணலட்சுமியின் மருமகளும் பத்மரூபி, ஜெயவதனி, நிகேதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுரேஸ்குமார், சதீஸ்குமார் கவிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், ராஜேஸ்வரி, நாகேஸ்வரி, தெய்வேந்திரம் மற்றும் அம்பலவாணர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தர்மராஜா, சாரதாதேவி, மற்றும் கமலாதேவி, சகுந்தலாதேவி ஆகியோரின் மைத்துனியும் நிவாஜன், அற்சுதன், தரண்யன், ராகவி, தாருஜன்,இனியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2025) 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புக்கு: 0773151485

தகவல் - குடும்பத்தினர்.

செய்தி : 021 493 0006 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org